Registered as a Newspaper பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மாசி 3 | (15.02.94) | செவ்வாய்க்கிழமை | ஓசை 362

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 6000 ஆசிரியர் பற்றாக்குறை

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாக மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்துள்ளார். இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மாகாணசபை மேற்கொண்டு வருவதாகவும் விரைவில் வெற்றிடங்கள் நிரப்பப்படுமெனவும் அவர் தெரிவித்தார். மேலும் இவ்வெற்றிடங்களை நிரப்பிக் கொண்டிருக்கும் போதே 2000க்கு மேற்பட்டவர்கள் ஓய்வு பெறுவர். மேலும்பலர் சேவையில் இருந்து நடுவில் விலகிச் செல்கின்றனர். இவ்வாறான வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்குப் பலகாலம் எடுக்கிறது எனவே ஆசிரியர் சேவைக்கு தொடர்ந்து சேவையாற்றக் கூடியவர்களை தெரிவுசெய்ய வேண்டும். இடையில் (4ஆம் பக்கம் பார்க்க)

# மார்ச் மாத உள்ளூராட்சி தேர்தலின் பின் வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை!

### வழமையான நடவடிக்கையாக

## 30 தமிழ் இளைஞர்கள் கொட்டாஞ்சேனையில் கைது

(கொழும்பு)

கொட்டாஞ்சேனையில் சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் நடத்திய சுற்றிவளைப்பின் போது, சுமார் முப்பது தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இக்கைது நடவடிக்கை நள்ளிரவு வரை தொடர்ந்ததாகத் தெரிய வருகிறது.

கைதான சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் இது ஒரு வழமையான நடவடிக்கை என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கற்பிட்டி மீனவருக்கு கடலுக்குச் செல்லத் தடை

### புலிகளுக்கு பொருள் விற்கிறார்களாம்

(கொழும்பு)

கற்பிட்டிப்பகுதி மீனவர்கள் விடுதலைப்புலிகளுக்கு டீசல் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதாகவும் இதனாலேயே அப்பகுதியில் கடல் வலயத்தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் வடமேற்கு பிரதேச கடற்படை அதிகாரி கொமடோர் ஏ. எஸ். ராசீக் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கடத்தல் மற்றும் விற்பனைகள் நிறுத்தப்படும்வரை கடல்வலய தடைச் சட்டம் நீக்கப்படமாட்டாது (4ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கு வேட்பாளருக்கு

## கொலை மிரட்டல் வந்தால்

## கப்பல் பயணிகள் இன்று வரவும்

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பலில் பிரயாணம் செய்ய பெயர் பதிந்த பிரயாணிகள் அனைவரையும் இன்று மதியம் 12 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு சமுகமளிக்கும்படி யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (சி)

## றுகுணுவில் ஒய்வூதிய வவுச்சர்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கட்டட திருத்த வேலைக்கான பொருள்கள், 802 மெற்றிக் தொன் உரம் மற்றும் பல பொருள்களும், பெப்ரவரி மாத ஒய்வூதிய வவுச்சர் ஆகியவற்றுடன் றுகுணு கப்பல் நேற்று பருத்தித்துறை துறை (4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் புகைமண்டலம்

(குருநகர்)

நேற்றுப் பகல் 1 மணியளவில் பூநகரி - கல்முனை இறங்கு துறைப் பகுதிகளில்புகை மண்டலம் வான்நோக்கி எழுந்ததைப் பார்த்ததாக கடற்

## புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை ஜனாதிபதி தேர்தலின் முன் விடுவிக்க திட்டம்

[கொழும்பு]

வட பகுதி மீதான பாரிய இராணுவ நடவடிக்கைக்கு சிறிலங்கா இராணுவத்தினர் தயாராகி வருவதாகவும், வருட முடிவில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிற்கு முன் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி, அவர்களின் கட்டுப்பாட்டு பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உறுதியாகவுள்ளது எனவும் கொழும்பிலிருந்து வெளிவரும் வாராந்தப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து இந்தப் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதல் திட்டம் பற்றி கொழும்பு இராணுவ வட்டாரங்களிலிருந்தும் அறியப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை அமைதியாக நடாத்தி முடிப்பதே அரசாங்கத்தின் தந்திரோபாயம் என்றும் இத் தேர்தலின் பின் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வடக்கு-கிழக்கைத்தவிர்த்து ஜனாதிபதித் தேர்தல் நடாத்துவதற்கு அரசியலமைப்புச் சட்டம் இடம்கொடுக்காது; ஜனாதிபதி மரணமடையும் பட்சத்தில் மட்டுமே ஒருமாத இடைவெளியில் வெவ்வேறு பகுதிகளில் தேர்தலை நடாத்த முடியும்.

1981 ஜனாதிபதித் தேர்தல் சட்டவிளச்சட்டம் இலக்கம்15இன்படி பல்வேறு பகுதிகளில் பல்வேறு தேர்தல் நடத்தப்படுமாயின் முழுத் தேர்தல் முடிவுற்றபின்னரே வாக்குகள் எண்ணப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகளை இராணுவ நடவடிக்கை மூலம் பலவீனப்படுத்தி அரசியல் நீரோட்டத்திற்கு கொண்டு வருவதன்மூலம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

## இவ் வருடத்திற்கான முதல் தாக்குதல் திருகோணமலையில் ஆரம்பம்

மாலை இடம்பெற்ற இக் … னர்.

## கற்பிட்டி மீனவருக்கு கடலுக்குச் செல்லத் தடை

### புலிகளுக்கு பொருள் விற்கிறார்களாம்

(கொழும்பு)

கற்பிட்டிப்பகுதி மீனவர்கள் விடுதலைப்புலிகளுக்கு டீசல் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதாகவும் இதனாலேயே அப்பகுதியில் கடல் வலயத்தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் வடமேற்கு பிரதேச கடற்படை அதிகாரி கொமடோர் ஏ. எஸ். ராசிக் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கடத்தல் மற்றும் விற்பனைகள் நிறுத்தப்படும்வரை கடல்வலய தடைச் சட்டம் நீக்கப்படமாட்டாது

(4ஆம் பக்கம் பார்க்க)

கிழக்கு வேட்பாளருக்கு

## கொலை மிரட்டல் வந்தால் மட்டுமே பாதுகாப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தனித்தனியாக பாதுகாப்பு வழங்க முடியாது. ஆனால் குறித்த ஒரு வேட்பாளருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக பொலிசார் அறிந்தால் மட்டும் தனியான பாதுகாப்பு வழங்கப்படும்.

இவ்வாறு தனியான பாதுகாப்பு கோரிய வேட்பாளர்களுக்குப் பொலிசார் அறிவித்துள்ளனர். வேட்பாளர்கள் தங்குமிடம் பற்றிய தக

(4ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர்கள் விளையாட்டு மூதாட்டி உயிரைக்குடித்தது

இரவு வேளையில், எரிந்து கொண்டிருந்த மெழுகுதிரியை ஏந்தியவாறு, அசைந்து வந்த ஆமையைக் கண்ட மூதாட்டி ஒருவர், பத்துத் தினங்கள் அதிர்ச்சியிலிருந்து மரணமடைந்த சம்பவமொன்று உடுவிலில் நடைபெற்றது

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: உடுவில் சூரியகுமார் வீதியிலுள்ள ஒரு வீட்டிலுள்ள மூன்று இளைஞர்கள் சிறிய ஆமையொன்றின் முதுகின் மீது மெழுகுவர்த்தியைக் கொழுத்தி அதை நடமாட விட்டனர். இவ் ஆமை அருகிலுள்ள வீட்டிற்கு ஆடி அசைந்தவாறு சென்றது. அச்சமயம் அவ்வீட்டிலிருந்த கந்தையா செல்லம்மா (75) என்னும் மூதாட்டி, அசைந்தவாறு வந்த இவ்வெளிச்

(4ஆம் பக்கம் பார்க்க)

…

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கட்டட திருத்த வேலைக்கான பொருள்கள், 802 மெற்றிக் தொன் உரம் மற்றும் பல பொருள்களும், பெப்ரவரி மாத ஒப்லூதிய வவுச்சர் ஆகியவற்றுடன் றுகுணு கப்பல் நேற்று பருத்தித்துறை துறை

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் புகைமண்டலம்

(குருநகர்)

நேற்றுப் பகல் 1 மணியளவில் பூநகரி - கல்முனை இறங்கு துறைப் பகுதிகளில்புகை மண்டலம் வான்நோக்கி எழுந்ததைப் பார்த்ததாக கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அதற்குச் சற்று முன்பாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

விக்கின்றன.

கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து இந்தப்பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதல் திட்டம் பற்றி கொழும்பு இராணுவ வட்டாரங்களிலிருந்தும் அறியப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை அமைதியாக நடாத்தி முடிப்பதே அரசாங்கத்தின் தந்திரோபாயம் என்றும் இத் தேர்தலின் பின் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத் தாக்குதலுக்கு எந்தவிலை கொடுக்கவும் அரசு தயாராக இருக்கின்றது என்றும் இதன்மூலம் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உறுதியாக இருக்கிறது எனவும் சண்டே ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வடக்கு-கிழக்கைத்தவிர்த்து ஜனாதிபதித் தேர்தல் நடாத்துவதற்கு அரசியலமைப்புச் சட்டம் இடம்கொடுக்காது. ஜனாதிபதி மரணமடையும் பட்சத்தில் மட்டுமே ஒருமாத இடைவெளியில் வெவ்வேறு பகுதிகளில் தேர்தலை நடாத்த முடியும்.

1981 ஜனாதிபதித் தேர்தல் கட்டளைச்சட்டம் இலக்கம்15இன்படி பல்வேறு பகுதிகளில் பல்வேறு தேர்தல் நடத்தப்படுமாயின் முழுத் தேர்தல் முடிவுற்றபின்னரே வாக்குகள் எண்ணப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகளை இராணுவ நடவடிக்கை மூலம் பலவீனப்படுத்தி அரசியல் நீரோட்டத்திற்கு கொண்டு வருவதன்மூலம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

## இவ் வருடத்திற்கான முதல் தாக்குதல் திருகோணமலையில் ஆரம்பம்

### இராணுவ வட்டாரங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினர் இவ் ஆண்டின் முதல் தாக்குதலை கிழக்குமாகாண காடுகளில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்திலும் வவுனியா மாவட்டத்திலும் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலை குழைக்க விடுதலைப்புலிகள் தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்கக் கூடும் என்பதனாலேயே இராணுவத்தினர் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக கிழக்கில் திருகோணமலைக் காடுகளில் பெருமளவு இராணுவத்தினர் கடந்த இரு தினங்களாக 'வேலு சுமண' தாக்குதல்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இராணுவத்தினர் தொடர்ந்தும்இதே போன்ற தாக்குதல்களை நடாத்த திட்டமிட்டு வருவதாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு பிரதமர் ரணிலால் நிராகரிப்பு

(கொழும்பு)

சர்வோதய இயக்கத் தலைவர் ஏ. டி. ஆரியரட்ணவிடம் விடுதலைப்புலிகளால் தெரிவிக்கப்பட்டதாகக்கூறப்படும் சமாதானப்பேச்சுவார்த்தை குறித்த நிலைப்பாட்டை சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

கடந்த வாரம் விடுதலைப் புலிகளின் அரசியற் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் சர்வோதய தலைவர் ஏ. டி. ஆரியரட்ணவை சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினார். இப் பேச்சுக்களின் போது வடக்கு- கிழக்கு பகுதியில் அமைதியை ஏற்படுத்துவதற்கான சூழ் நிலையை உருவாக்கும்படி கரிகாலன் கூறியதாக ஆரியரட்ண தெரிவித்திருந்தார்.

இவ் யோசனையை நிராகரித்த ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு யோசனையும் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனிடமிருந்தே வரவேண்டும் என

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொலிசாரினால் தமிழர் அடித்துக் கொலை

### வாழைச்சேனையில் கொடூரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைப் பகுதியில் பொதுமகன் ஒருவர் சிறிலங்கா பொலிசாரால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான பெரிய தம்பிராஜதுரை என்பவரே பலத்த சித்திரவதைகளின்பின் பொலிசாரால் அடித்துக் கொல்லப்பட்டவராவார். கடந்த புதன்கிழமை நடைபெற்ற இக் கோரச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டவரின் சகோதரரான செல்வம் என்பவர் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

## அரைவாசி பாராளுமன்ற உறுப்பினரே தேர்தல் மூலம் தெரிவாவர்

### ஜனாதிபதியின் புதிய தேர்தல்முறை இது

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவு செய்யும் போது புதிய நடைமுறை ஒன்றைக் கடைப்பிடிக்கவுள்ளதாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிப்பேர் மக்களால் வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்படுவர் என்பதுவும் மீதிஅரைவாசி உறுப்பினர்கள் தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப்படுவர் என்பதுவும் ஜனாதிபதி கடைப்பிடிக்கவுள்ள புதிய நடைமுறை ஆகும்.

இதனைச் செயற்படுத்துவதற்கு அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வரப்படும் என அவர் மேலும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண கூட்டம் கட்டுகஸ் தோட்டையில் நடைபெற்றபோது இவ்வாறு கூறிய அவர், ஜனாதிபதி தெரிவு பாராளுமன்றம் மூலம் நடத்தப்பட வேண்டும் என்பதும், புதிதாக அறிமுகம் செய்யப்படவுள்ள பொதுத் தேர்தல் முறையும் தேசிய மட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் ஆகும். இதனால்தான் இவை குறித்து அங்கீகாரம் பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் பெறப்படவுள்ளது.

எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது போல ஜனாதிபதியாக நான் தெரிவு செய்யப்பட மாட்டேன் என்ற பயத்தினால் புதிய ஜனாதிபதி தெரிவு முறையைக் கொண்டு வர முயலவில்லை.

இரண்டு தேர்தல்கள் நடத்துவதால் பணம் வீண் செல

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு பதில் முஸ்லிம்

சிறிலங்கா சுதந்திரகட்சியின் தேசிய பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினரான ரி. டபிள்யூ இராஜரத்தினம் மரணமடைந்ததைத் தொடர்ந்து வெற்றிடமாக உள்ள அப்பதவிக்கு முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட இருப்பதாக தெரிய வருகின்றது.

முகமட் சப்ரூதின் என்பவரே இவ்வாறு நியமனம் பெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரனைச் சந்திக்க விரைவில் யாழ். செல்வேன்

### சர்வோதய தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்திக்க தான் விரைவில் யாழ்ப்பாணம் செல்ல உள்ளதாக சர்வோதயத் தலைவர் ஏ. டி. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கம் - புலிகள் இருதரப்பினருக்கும் இடையேயான பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். இதனைச் செயற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார்.

இத் தகவலை வெளியிட்ட 'லங்காதீப' பத்திரிகை சர்வோதயத் தலைவர் சென்ற வார இறுதியில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைச் சந்தித்து யாழ்ப்பாணத்தில் புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தை தொடர்பாக எடுத்து விளக்கியதாகவும், யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் அவர் சென்றபோது விடுதலைப்புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலனுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பான ஓர் ஒலிப்பதிவு நாடாவை சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தான் மீண்டும் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளதாகவும் பின்னர் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இருதரப்பினரிடையே பேச்சுவார்த்தைகள் தொடங்கக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பாலர் ஆசிரியர்

கடைசித் தகைமை க. பொ. த. (சா/த) சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம் உயர்கலைக் கல்லூரி. ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(7520)

### தவறிவிட்டது

2 பவுண் பலநிற குண்டுச் சங்கிலி காந்தி நிலையம்ஆசீர்வாதப்பர் வீதி, கனகரட்ணம் வீதி, ஆரியாலை, நாயன்மார்கட்டுச்சந்தி ஆகிய பகுதிகளில் தவறிவிட்டது. கண்டெடுத்த கருணை உள்ளம் கொண்டவர்கள் 39, செம்மணி வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பவும் சன்மானம் வழங்கப்படும்.

(சி-8630)

### பிடியாணை பிறப்பிப்பு

(வடமராட்சி)

அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்துரை - நற்குணம் என்பவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்நபர் ஜோன் றொபேட் மேரி என்ற பெண்ணிற்கு கொட்டனால் அடித்து காயமிழைத்ததாக இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெப்ரவரி 3ஆம் திகதி விசாரணைக்காக பருத்தித்துறை நீதிமன்றம் சமுகமளிக்காததினால் அவரைப்பிடிப்பதற்கு நீதிமன்று பகிரங்க பிடியாணை பிறப்பித்துள்ளது.

(யோ)

### தையல் நிலையம் திறப்பு

(தொல்புரம்)

வறிய குடும்பங்களைச் சேர்ந்த மகளிர்க்கான சுயவேலைவாய்ப்பு வசதியை மேம்படுத்தும் நோக்குடன் சங்கானையில் தையல் நிலையம் ஒன்று வலிகாமம் மேற்கு தென்மேற்கு அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### தையல் பயிற்சி நிலையம் அமைக்க

# பயண ஆவண மோசடி தடுக்க வெளிநாட்டுக் குழு

கடவுச் சீட்டு, விசா மற்றும் பயண ஆவணங்களில் மோசடிகளைச் செய்து கனடா, ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கு இலங்கையர்களை அனுப்பும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராயவென அந்நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுவொன்று இலங்கை வரவிருக்கிறது.

கனடிய பிரஜாவுரிமை மற்றும் குடிவரவு அமைச்சின் பணிப்பாளர்நாயகம் ஹாலம் ஜோன்ஸ்டன் தலைமையிலான இக்குழுவில் ஜேர்மன் எல்லைக்காவல்பொலிஸ் பணிப்பாளர் ஹெல்மட் சிப்பிள், நெதர்லாந்து நீதியமைச்சின் பிராந்திய பணிப்பாளர் ஹார்கே ஹெய்டா, சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் முகாமையாளர் றொபர்ட் ரிச்சர்ட்சன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தேசிய பயண ஆவணங்களை துஷ்பிரயோகம் செய்வோரை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை ஒருங்கிணைக்கவிமானசேவை அதிகாரிகளுடனும் அரசாங்க அதிகாரிகளுடனும் இக் குழுவினர் செயற்படுவர்.

இவர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கனடிய உயர் ஸ்தானிகரகத்தின் ஏற்பாட்டில் கொழும்பு ஹில்டன் ஹொட்டலில் பத்திரிகையாளர் மகாநாடொன்றில் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## எமது புதிய வெளியீடுகள்

1. "ஒப்பறேசன் தவளை"
(முழுநீள பூநகரி சமர்)
2. கமலின்
மகாநதி
3. பிரசாந்தின்
திருடா திருடா
(ஒறிஜினல்- (FULL SCREEN)

மற்றும் மம்மி டாடி, வாங்க பாட்னர் வாங்க, சிந்து நதிப்பூ

**வீடியோவிமல்**
117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்.

(சி-8629)

---

## ஆசிரியர்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பிரத்தியேகப் பாடசாலைக்கு 11ஆம் ஆண்டுவரை விஞ்ஞான, கணித, ஆங்கில பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. விரும்புவோர் தமது தகுதி, அனுபவம் என்பவற்றை வெளிப்படுத்தி கற்பிக்க விரும்பும் பாடத்தை குறிப்பிட்டு விண்ணப்பத்தினை 25-02-94க்கு முன்னதாக தமிழீழக்கல்விக் கழகம், பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(7526)

---

## இலவச பாமசி வகுப்பு ஆரம்பம்

வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் நேர்முகப் பரீட்சையில் தெரிவானவர்கள் மட்டுமே எமது பணிமனைக்கு 1994-02-16 ஆம் திகதி காலை 9 மணிக்கு சமுகம் கொடுக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

1994-02-19ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் பாமசி வகுப்புக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளதென்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

செயலர்

**யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்**

(சி-8624)

---

நீண்ட இடைவெளியின் பின் வட்டுக்கோட்டையில்

## யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்ற ஆதரவில்

யாழ் பல்கலைக் கழக நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும்

❋ சத்தியவான் சாவித்திரி ❋

(புராண இசை நாடகம்)

தயாரிப்பு, நெறியாள்கை பேராசிரியர் இ. பாலசுந்தரம்

இடம்: யாழ் கல்லூரி ஒட்லி மண்டபம்

காலம்: 16-2-1994 புதன் பி. ப. 4.00 மணி

அன்பளிப்பு ரூபா 20/-
மாணவர்களுக்கு ரூபா 10/-

(7511)

---

இலங்கை

## இளங்கலைஞர் மன்றத்தின் 14-வது இசைவிழா

### 4-ம் நாள் 15.2.94 செவ்வாய்க்கிழமை

'ஞானம்ஸ் ஹோட்டல்' நிறுவன ஆதரவில்

மாலை

**4.00 - 5.00 மங்கள இசை**

வி. எ. ராமையா ) நாதஸ்வரம்
ஆர். லோகநாதன் )
ஆர். தங்கவேல் ) தவில்
கே. மகேந்திரன் )

**5.00 - 5.10 மிருதங்க இசை**

எஸ். காந்தருபன், எஸ். அகிலன்
எஸ். சிவசங்கர், ஜே. சுதாகரன்

---

அரசினர் போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

### அமைய கணக்குப் பதிவாளர்
### (CASUAL BOOK-KEEPER)

இவ் வைத்தியசாலையில் வெற்றிடமாக உள்ள மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

(1) க. பொ. த. (சா/த) பரீட்சையில் அல்லது க. பொ. த. பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி, கணிதம்/எண்கணிதம்/ வர்த்தக கணிதம் ஆகிய பாடங்களுட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(2) அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்குப் பதிவியல் பயிற்சி நெறியில் சித்தி பெற்றிருந்தல் வேண்டும் (Book keeping Course).

(3) 28-02-94இல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 28-02-94 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் என்னால் அறிவிக்கப்படும் ஒரு திகதியில் எனது பணிமனையில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

தெரிவு செய்யப்படுபவருக்கு அமைய அடிப்படையில் நியமனமும், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சம்பள விகிதப்படி வேதனமும் வழங்கப்படும்.

பணிப்பாளர்

(சி-8625)

---

## நினைவு கூருகின்றோம்.,
## 1994-02-15

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

❋ செல்வன் (பத்தக்குட்டி மகேந்திரன் - பெரிய வெளி, மூதூர் - திருமலை)

திருமலை - மூதூர் மல்லிகைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

❋ நவம் (கதிர்காமத்தம்பி நவரட்ணராஜா - பள்ளிக்குடியிருப்பு, மூதூர் - திருமலை)

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொலைப்பட்ட இளவாலை, பெரியவிளானைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1988ஆம் ஆண்டு மட்டு - இருதயபுரம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்

நீதிமன்று பகிரங்க பிடியாணை பிறப்பித்துள்ளது.

(யோ)

## தையல் நிலையம் திறப்பு

(தொல்புரம்)

வறிய குடும்பங்களைச் சேர்ந்த மகளிர்க்கான சுயவேலைவாய்ப்பு வசதியை மேம்படுத்தும் நோக்குடன் சங்கானையில் தையல் நிலையம் ஒன்று வலிகாமம் மனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## தையல் பயிற்சி நிலையம் அமைக்க முயற்சி

(கொழும்புத்துறை)

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் இந்த ஆண்டு ஒவ்வொரு தையல் பயிற்சி நிலையம் வீதம் அமைத்து கொடுக்கப்பட உள்ளதாக தெரிய வந்துள்ளது.

பயிற்சி நிலையத்தை நடாத்துவதற்கு வசதியாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் இலவசமாக பெறக்கூடிய கட்டடமொன்றினை பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## சைக்கிள் திருட்டு பிடிபட்டது

(வடமராட்சி)

ஆறு துவிச்சக்கரவண்டிகளைத் திருடிய ஒருவர் பருத்தித்துறை காவல்துறையினரிடம் சிக்கிக் கொண்டார். [...]ண்டநாட்களாக துவிச்சக்கர வண்டித் திருட்டுக்களில் [...]டுபட்டு காவல்துறையினருக்கு டிமிக்கி கொடுத்து வந்தவரே சிக்கிக் கொண்டவராவார்.

துன்னாலை வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை-புவிலோகநாதன் என்பவரிடம் இருந்து காவல்துறையினர் ஆறு துவிச்சக்கர வண்டிகளை மீட்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவின் பேரில் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள இவர் மீது புலன்விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

மற்றுமொரு நபரிடமிருந்தும் இரண்டு துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளன. காவல்துறையினரின்சாதுரியத்தினால் இமையாணன் பகுதியில் களவாடப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் இரண்டும்புன்னாலைக் கட்டுவன் ஈவினையில் வைத்து பருத்தித்துறை காவல்துறையினர் மீட்டுள்ளனர். செல்லையா - செல்வராசா என்பவரிடம் இருந்தே இந்த இரண்டு துவிச்சக்கர வண்டிகளும் மீட்கப்பட்டன.

(யோ)

# ஆசிரியர்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பிரத்தியேகப் பாடசாலைக்கு 11ஆம் ஆண்டுவரை விஞ்ஞான, கணித, ஆங்கில பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. விரும்புவோர் தமது தகுதி, அனுபவம் என்பவற்றை வெளிப்படுத்தி கற்பிக்க விரும்பும் பாடத்தை குறிப்பிட்டு விண்ணப்பத்தினை 25-02-94க்கு முன்னதாகதமிழீழக்கல்விக் கழகம், பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(7526)

# வெளிவந்துவிட்டது

## சமூகக்கல்வி

துரித மீட்டலுக்கான வினா விடை

ஆண்டு 9

ஆக்கம்:- க. சந்திரசேகரம்

ஏகவிநியோகஸ்தர்கள்:-

1. சோதி புத்தகசாலை
   கச்சாய் வீதி, சாவகச்சேரி.
2. ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
   235, காங்கேசன்துறைச்சாலை,
   யாழ்ப்பாணம்.

(7527)

# நீங்காத நினைவுகள்
# முதலாம் ஆண்டு அஞ்சலி



தோற்றம்
**17-08-75**

மறைவு
**26-02-93**

## சிவபாதசுந்தரம் சிவநீதன் (சபேஸ்)

திதி:- 15-02-94

ஒழுக்கம் பண்பாடமைய உயர்ந்து வாழ்வில் நீதி
பழுதில்லாச் சொத்தாகப் பரிணமித்த ஆண்மை வாய்ச்
செழுமை பெறச் சீராக்கும் சிவநீதன் எமை என்றும்
அழுத கண்ணாக்கி ஆண்டொன்றாம் அஞ்சலித்தோம் சாந்தி:

கே.கே.எஸ்,வீதி,
யாழ்ப்பாணம். (7523)

-குடும்பத்தினர்

# 4-ம் நாள் 15.2.94
# செவ்வாய்க்கிழமை
## 'ஞானம்ஸ் ஹோட்டல்' நிறுவன ஆதரவில்

மாலை

**4.00 - 5.00 மங்கள இசை**

வி. எ. ராமையா )
ஆர். லோகநாதன் ) நாதஸ்வரம்
ஆர். தங்கவேல் )
கே. மகேந்திரன் ) தவில்

**5.00 - 5.10 மிருதங்க இசை**

எஸ். காந்தரூபன், எஸ். அகிலன்
எஸ். சிவசங்கர், ஜே. சுதாகரன்

**5.10 - 5.30 பாட்டு**

பி. திசிகேசன், எஸ். தாரணி,
பி. சுபகேசன், எ. ப்ரகாசினி
பி. சுதர்சினி, கே. இறைவி, ரி. சுபாஜினி,
எஸ். தர்ஷிலா, பி. கோபி, எஸ். நிச்சலா
ரி. ரேணுகா - வயலின்
எம். கஜன் - மிருதங்கம்

**5.30 - 5.50 வயலின் இசை**

எஸ். திருமாறன், ஜே றனிதா,
வி. வித்தியாசங்கர் ஜே. ஜெயபாரதி, | வயலின்
எஸ். கனிஷியா
எஸ். கமலதாஸன் - மிருதங்கம்

**5.50 - 6.15 பாட்டு**

எம். தாணுநாதசர்மா - பாட்டு
எஸ். சர்வேஸ்வரசர்மா - வயலின்
எஸ். துரைராஜா - மிருதங்கம்

**6.15 - 7.00 பாட்டு**

நல். கந்தையா - பாட்டு
எஸ். வெங்கடேசசர்மா - வயலின்
எஸ். பாலச்சந்திரசர்மா - மிருதங்கம்

**7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்**

திரு. எஸ். ஞானப்பிரகாசம் (ஞானம்ஸ்)
திரு எஸ். பரமசாமி (வர்த்தகர்)
திரு. பெஸ்லிபாஸ்கரதேவன்
அருளுரை: அருட்திரு. நீ. மரியசேவியர், (திருமறைக் கலா மன்றம்)
தலைவர்: கவிஞர் சோ. பத்மநாதன்
பிரதம விருந்தினர்: அருட்திரு. எஸ்.ஜே. இமானுவேல் (பிரான்சிஸ் ஸேவியர் குருமடத் தலைவர்)
சிறப்பு விருந்தினர்: அருட்திரு. கரவையூர் செல்வம் அ.ம.தி. (தொடர்பகம்)

**7.30 - 8.30 வில்லிசை**

ஸ்ரீ தேவி வில்லிசைக் குழுவினர்,
கலைமாமணி, எஸ்.எஸ். சர்மா வழங்கும்
'கோபால கிருஷ்ண பாரதியார்'

**8.30 - 9.30 பரதநாட்டியம்**

மானிப்பாய், கலைக்கோவில் மாணவிகள்
தயாரிப்பு: லீலா செல்வராஜா

## வாழ்த்துவோர்
## மணியம் ஸ்ரோர்ஸ்

பலாலி றோட், திருநெல்வேலி.

(சி-8626)

1994-02-15

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

❀ **செல்வன்** (பத்தக்குட்டி மகேந்திரன் - பெரியவெளி, மூதூர் - திருமலை)

திருமலை - மூதூர் மல்லிகைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

❀ **நவம்** (கதிர்காமத்தம்பி நவரட்ணராஜா - பள்ளிக்குடியிருப்பு, மூதூர் - திருமலை)

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொலைப்பட்ட இளவாலை, பெரியவிளானைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்;

1988ஆம் ஆண்டு மட்டு - இருதயபுரம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கப்டன் சபேசன்** (ஜோசப் ரவிச்சந்திரன் - இருதயபுரம் மேற்கு - மட்டு)

1989ஆம் ஆண்டு யாழ் - காரைநகர்ப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். சந்திரன்** (நாகலிங்கம் சந்திரகுமார்- இலந்தைச்சோலை - காரைநகர்)

**கண்ணன்** (குமாரசாமி தவயோகராசா - வேதரடைப்பு, காரைநகர் வடக்கு - யாழ்)

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியிற் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**சுதன்** (செல்வரட்ணம் சுதர்சன் - முள்ளியவளை - முல்லைத்தீவு)

யாழ் - உடுப்பிட்டி முகாமில் வைத்து இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - சகோதரிகளும் - ஆசிரியைகளுமான 2 தமிழ்ப்பெண்கள், மாவிட்டபுரத்தில் வைத்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் வைத்து மின்சாரம் பாய்ச்சி, சித்திரவதை செய்து கொல்லப்பட்டு, பின்னர் சுன்னாகம், சூராவத்தைப் பகுதியிலிருந்து அம்மியுடன் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டு - உன்னிச்சைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**லெப். ஈழமணி** (முத்தையா மனோகரன் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

யாழ் - கட்டுவன் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**முத்தரசன்-முத்தன்** (சுந்தரலிங்கம் சுரேஸ்குமார் - ஐந்துசந்தி, மானிப்பாய் வீதி - யாழ்)

1993ஆம் ஆண்டு கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் படகுகள் மீது சிறிலங்கா விமானப் படையினர் நடத்திய குண்டுவீச்சிலும் கடற்படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலிலும் பலியான 18 பயணிகள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❀ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கியகாலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8623)

சிந்தனைக்கு

கடமையைச் சரிவர ஆற்றும் போது அதில் அச்சத்திற்கு இடமில்லை.

-- வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

## யதார்த்தத்தை விளங்கிய நல்லெண்ணக் குழுக்கள்

அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவினதும், ஏனைய மத குழுக்களினதும் சமாதான முயற்சிகள் எந்தளவிற்கு வெற்றி அளிக்கும், சிறிலங்கா அரசாங்கம் அதை எந்தளவிற்கு ஏற்றுக் கொள்ளும் என்பவை எல்லாம் அறுதியிட முடியாதவை. ஆனால், இது எவ்வாறு இருப்பினும் ஆயர் கென்னத் பெர்னாண்டோ பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இரு அடிப்படை அம்சங்களை சரியாக மதிப்பீடு செய்துள்ளார் என்று கூறுவதில் மிகையில்லை.

''விடுதலைப் புலிகள் முன்வைக்கும் கருத்துக்கள் ஏற்புடையவை'', ''விடுதலைப்புலிகளே தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள்'' ஆகிய இவ்விரண்டு அம்சங்களுமே ஆயர் கென்னத் பெர்னாண்டோ இனப்பிரச்சினைத் தீர்விற்கு அடிப்படையானதென உணர்ந்து கொண்ட அம்சங்களாகும்.

இதேவேளை இக்கருத்தை ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெளிவாக முன்வைத்துள்ளார்போல் வடக்கிற்கு வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திச் சென்ற எந்த மதக் குழுவினரோ அன்றி வேறு தரப்பினரோ வெளிப்படையாக முன்வைக்காது விட்டாலும் இதனை ஏற்றுக் கொண்டே சென்றுள்ளனர். புலிகள் தரப்பு நியாயத்தைப் புரிந்து கொண்டுள்ளனர்.

கத்தோலிக்க அதிமேற்றிராணியார் மார்க்கஸ் பெர்னாண்டோ உட்பட சர்வோதயத் தலைவர் ஆரியரெட்னா வரையிலும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து திரு. ஆரியரெட்னா மிகவும் உறுதியான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவர் ''விடுதலைப் புலிகளின் கருத்து மிக நேர்மையான உறுதியான அறிவிப்பாகவே நான் கருதுகின்றேன்'' என பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையானது, இனப்பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானது என்பதை அவர்கள்

# தாயகக் கோட்பாடு; சுயநிர்ணய உரிமை

# நிரந்தர தீர்விற்கான அவசிய தேவை

1990 கள் காலனித்துவத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தசாப்தம் 'என ஐ நா பொதுச்சபை 1988 நவம்பர்' 22 -ம் திகதி பிரகடனம் செய்தது. ஐ நா. சாசனத்துடன் காலனித்துவம் அதன் சகல விதங்களிலும் இணக்கமானதல்லஎன ஐ.நா. சபைமீள உறுதிப்படுத்தியது. அத்துடன் சர்வதேச சமாதானத்திற்கும், பாதுகாப்புக்கும், இது ஒரு தீவிர மிரட்டலாகவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால்' காலனித்துவப் பகுதிகளுக்கு மட்டும் முழுமையாக சுயநிர்ணய உரிமையை வரையறுப்பது, இப்போது ஒரு தடையாகவே தென்படுகின்றது ஏனென்றால்; சில காலனித்துவப் பகுதிகள் விடப்படும் சூழ்நிலையில் இந்தப் பிரகடனத்தின்படி ஏனைய தரப்பினருடைய கடமைகளை இது அமுல் செய்வதில்லை.

1990 களின் ஆரம்பகாலச் சம்பவங்கள் 21 ஆம் நூற்றாண்டு பாரம் பரிய காலனித்துவத்திலிருந்து. விடுதலை பெறும் நூற்றாண்டாக இருக்குமெனக் கட்டியம் கூறுவதாகவுள்ளது. மேலைத்தேய காலனித்துவத்தின் மறைவிற்கு மத்தியிலும், சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு சர்வதேச உறவுகளின் வார்த்தைப் பிரயோகங்களிலிருந்து மறைவதற்கான அடையாளங்கள் எதனையும் காண முடியவில்லை. இது சுதந்திர நாடுகளுக்குள் சிறுபான்மை இனங்கள் மத்தியில் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. பெருமளவிலான பிரதேச தன்னாதிக்கம், பிரதேச பிரிவினை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றிற்கான தமது கோரிக்கைகளை நியாயப் படுத்த இதனை அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

இந்த சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தான் இலங்கைத் தமிழ் மக்கள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். 1983ஆம் ஆண்டிலிருந்து இதற்காகவே 50,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அடுத்தடுத்து

என்ற சொல் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற அதே வேளையில் நவீன சர்வதேச சட்டத்தில் இதன் அர்த்தம் முரண்படுவதாகவே உள்ளது சர்வதேச சட்டம் இறைமையை இன்றும் பாதுகாக்கின்றது. ஆனால் இதுதான் மக்களின் இறைமை.

'சமாதானத்திற்கான நிகழ்ச்சிநிரல்' ஒன்று 1992 யூனில் ஐ. நா. செயலாளர் நாயகத்தினால் வரையப்பட்டது. தமிழ் மக்கள் இதனை வரவேற்றார்கள். தடை செய்யும் ராஜதந்திரம், சமாதானத்தை உருவாக்குதல், சமாதானத்தைப் பாதுகாத்தல், பிரச்சினைகளைத் தொடர்ந்து சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களில் ஐ.நா. சபை செய்ய வேண்டிய முக்கிய பணிகளை இது வலியுறுத்துகின்றது.

சுதந்திர உறுப்பு நாடுகளில் நடைபெறும் தேர்தல்களில் அதிகளவிலான கண்காணிப்புப் பணியை ஐ. நா. மேற்கொள்வதையிட்டும் தமிழ் மக்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

ஐ. நா. சாசனத்தின் நோக்கங்கள் கோட்பாடுகளுக்கு அமைய சுயநிர்ணய உரிமையை மேம்படுத்துவதே ஐ. நா. உறுப்பு நாடுகளுடைய கடமை என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனைச் செய்யத் தவறுவது இனப்பிரச்சினைக்கும் வன்செயலுக்கும் இட்டுச் செல்வதாகவே உள்ளது.

கெடுபிடி யுத்தத்தின் முடிவு சர்வதேச உறவுகளில் ஒரு புதிய சகாப்தத்தைக் கொண்டு வந்தது. அத்துடன் சமாதானத்திற்கான ஐ. நா. வின் வேலையிலும் புதிய ஆரம்பம் தோன்றியது.

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து சிங்களவர் தலைமையிலான அரசாங்கங்கள் சிங்கள மக்களின் ஆக்கிரமிப்புடன் கூடிய தேசிய வாதத்தை ஊக்குவித்து போஷித்து வந்துள்ளன அத்துடன் தமது அரசியல் அதிகாரத்தை தமிழ் மக்களுக்குக் கேடு ஏற்படுவதற்காகவே பயன்படுத்தினர். தமிழர்களின் அரைப் பகுதியினருக்கு வாக்குரிமை

கப்படவேண்டும்.

இந்த மூன்று நிபந்தனைகளுக்கு குறைவான எதனையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனதமிழர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். இலங்கையில் இனப்பிரச்சினைக்கான எந்த ஒருநிரந்தர அரசியல் தீர்வும் தமிழ் பேசும் மக்கள் தமது அரசியல் பொருளாதார, சமூக, கலாசார இலக்குகளை ஒரு ஜனநாயக அமைப்புக்குள் தீர்மானிக்கக்கூடிய நியாயமான அபிலாஷைகளைக் கவனத்தில் எடுப்பதாகவே இருக்க வேண்டும் எனத் தமிழர்கள் நம்புகின்றனர்.

> ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 50 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. இக் கூட்டத் தொடரில் சுயநிர்ணய உரிமை, இலங்கை தமிழர் தேசியப் பிரச்சினை என்ற தலைப்பிலான அறிக்கை ஒன்று இலண்டனிலிருந்து இயங்கும் தமிழ் தகவல் நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இருந்து சில பகுதிகள் இங்கு வெளியிடப்படுகின்றன.

1987இல் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை தொடர்பானதனது முதலாவது தீர்மானத்தை நிறைவேற்றியது. தமிழர்கள் காணாமற் போவது தொடர்பான ஐ. நா. செயற்குழுவின் அறிக்கையைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1993 பெப்ரவரி 8-ம் திகதி 15 அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன. சுயநிர்ணய உரிமையும் காலனித்துவ ஆட்சியிலுள்ள மக்கள் அதனை பிரயோகிப்பது தொடர்பாகவுமே இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. மனித உரிமைகளுக்குமான ஐ நா. ஆணைக்குழுவின் 49ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொண்ட பிரதிநிதிகளிடம் பின்வரும் கோரிக்கைகள் இந்த தீர்மானத்தின் மூலம் விடுக்கப்பட்டது.

(1) இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதியில் தமிழர் ''தாயகம்'' உள்ளது என்பதை அங்கீகரிக்க வேண்டும்.

(2) வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் சுயநிர்ணய

யாகவுள்ள முக்கிய விடயமாகும்.

1993 ஆம் ஆண்டு யூன் 10 ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழு ஏகமனதாக மேற்கொண்ட தீர்மானத்தின் மூலம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும் எனக் கோரியது. வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டை மறுதலிக்கும் நோக்குடனேயே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். என்ற பிரேரணை முன் வைக்கப்பட்டுள்ளதாக தமிழ்மக்கள் நம்புகின்றார்கள்.

பிரஜைகள் அனைவருக்கும் சிறப்பான பாதுகாப்பை வழங்கக் கூடிய நிலையில் இலங்கை அதிகாரிகள் உள்ளனர் என்றோ வழங்க விரும்புகின்றார்கள் என்றோ இந்த இடத்தில் கூறுவது சரியானதல்ல. இலங்கை தொடர்ச்சியாகப் பன்னிரண்டு வருடகாலமாக அவசர கால நிலைமையின் கீழ்தான் ஆளப்படுகின்றது. இதன்கீழ் பல உரிமைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டம் பாதுகாப்பு படைகளுக்கு அதி விசேட அதிகாரங்களை கொடுத்துள்ளது,

மனித உரிமைகள் அமைப்புக்களின் தகவலின்படி 1992 இல் கிழக்கு மாகாணத்தில் மட்டும் 400க்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர். தென்பகுதியில் காணாமல் போன 40,000 பேர் தொடர்பாகவோ கிழக்கில் காணாமல் போன 5000 பேர் தொடர்பாகவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மனித உரிமைகள் தொடர்பாக கண்காணிப்பதற்கு மனித உரிமைகள் பணிக்குழு ஒன்று 1991 ஆகஸ்டில் அமைக்கப்பட்டது.

முதலாவது அறிக்கை, வெளியிடப்பட்டது. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுவதையிட்டு இதில் விபரிக்கப்பட்டுள்ளது. 1992/93 காலத்தில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட 2,351, பேரில், 114 பேரை இவ்வமைப்பு கண்டுபிடித்திருக்கின்றது.

1993 ஆகஸ்டில் நோபல் பரிசு பெற்ற நால்வரின் புதிய சமாதானத் திட்டத்தை அரசாங்கம் நிராகரித்தது. கனடாவிலுள்ள உலகளாவிய கூட்டுறவுக்கான உலக கவுன்ஸிலின் சார்பிலேயே இத்திட்டம் முன்வைக்கப்பட்டது. இத்திட்டம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்தது. ஐ நா. கண்காணிப்புடனான ஒரு யுத்த நிறுத்தம். யுத்தமற்ற வலயங்களை உருவாக்குதல். சமஷ்டி திட்டமொன்றை ஏற்றுக் கொள்ளல், ஐ. நா. கண்காணிப்புடனான தேர்தல் வடக்கு - கிழக்கில் நடைபெறும்.

ஆனால், இத்திட்டத்தை நிராகரித்த இலங்கை அரசாங்கம், இது ஒரு ''உள்நாட்டு பயங்கரவாதப் பிரச்சினை'' எனவும் சமாதான முயற்சிகள் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் மூலமாக மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தது.

1993 ஆகஸ்டில் கொழும்பில் நடைபெற்ற ''ஜனநாயகமும், இடம் பெயர்தலும் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் கூட இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஐ.நா. மத்தியஸ்தத்தைப் பெறுமாறு இலங்கையைக் கோரினர்.

கடந்த வருடம் இலங்கையில் பாதுகாப்பு வரிஒரு வீதத்திலிருந்து மூன்றுவீதமாக அதிகரித்தது. பாதுகாப் புச்செலவின அதிகரிப்பு காரணமாகவே இந்த அதிகரிப்பு ஏற்பட்டது 1992இல் 16 மில்லியன் ரூபா பாதுகாப்புச் செலவீனமாகச் செலவிடப்பட்டது. 1993 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப பாதுகாப்புச் செலவீன ஒதுக்கீடு 19. 8 மில்லியன் ரூபாவாக இருந்தது. ஆனால் மேலதிக 8 மில்லியன் ரூபாவை பாதுகாப்பு அமைச்சு இப்போது கேட்டுள்ளது.

இந்தியாவுடனான உறவுகள் இப்போது மேம்பாடு அடைந்துள்ள நிலையில்கூட ஒரு மத்தியஸ்தபங்கை இந்தியா வழங்காது என்பதை அண்மைய சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

எனவே யுத்தத்துடன் சம்ப

னாண்டோ தெளிவாக முன்வைத்துள்ளார்போல் வடக்கிற்கு வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திச் சென்ற எந்த மதக்குழுவினரோ அன்றி வேறு தரப்பினரோ வெளிப்படையாக முன்வைக்காது விட்டாலும் இதனை ஏற்றுக் கொண்டே சென்றுள்ளனர். புலிகள் தரப்பு நியாயத்தைப் புரிந்து கொண்டுள்ளனர்.

கத்தோலிக்க அதிமேற்றிராணியார் மார்க்கஸ் பெர்னாண்டோ உட்பட சர்வோதயத் தலைவர் ஆரியரெட்ணா வரையிலும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து திரு. ஆரியரெட்ணா மிகவும் உறுதியான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவர் ''விடுதலைப் புலிகளின் கருத்து மிக நேர்மையான உறுதியான அறிவிப்பாகவே நான் கருதுகின்றேன்'' என பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையானது, இனப்பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதாகவே இருக்கின்றது. இதை மறுப்பதற்கு கூடிய வலுவான காரணமும் எவரிடமும் இல்லை. ஏனெனில், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் அதற்கு அடிப்படைத் தேவையான யுத்தநிறுத்தமும், பொருளாதாரத் தடை நீக்கலும் என்பதை எதன் அடிப்படையில் மறுப்பது? அதனை மறுப்பதென்பது சமாதான முயற்சியைக் குழப்புவதற்கான நடவடிக்கை என்பதைத் துணிந்தே கூறலாம்.

இதேபோன்று தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதையும் சகலரும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். ஏனெனில், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு வழிநடத்திச் செல்பவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பினரே. அவர்களே தமிழர் தாயகத்துடனும், தமிழ் மக்களிடமும் நேரடியான தொடர்பு கொண்டுள்ளவர்கள். இன்று தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துபவர்களும் அவர்களாகவே உள்ளனர்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளைத் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளாது, விதண்டா வாதம் பேச அரசு ஊற்றப்படுவதும் கொழும்பில் இருந்து சிறிலங்கா அரசின் தயவில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களை தமிழர் பிரச்சினையுடன் சம்பந்தப்படுத்துவதும் பிரச்சினைத் தீர்வைச் சாத்தியமாக்கப் போவதில்லை, இக்குழுக்கள் தமது தனிப்பட்ட அபிலாசைகளையும், பிரச்சினைகளையும் பிரதிபலிப்பவர்களாக உள்ளனரே தவிரத் தமிழ்மக்களின் பிரச்சினைகளைப் பிரதிபலிப்பவர்களாக இல்லை. அவர்களிடம் தமிழ்மக்கள் பிரச்சினை தொடர்பாக அடிப்படைக் கொள்கை கூட ஏதும் கிடையாது.

இந்நிலையில், அங்கிலிக்கன் ஆயர் தெரிவித்திருப்பதாவது யதார்த்தத்தை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டுள்ளதே ஆகும். மனப்பூர்வமாக இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்புபவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள், ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

ஆனால், தேர்தல் குறித்தும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது குறித்தும் அரசியல் சதுரங்கம் ஆடுவதில் ஈடுபட்டிருக்கும் சிறிலங்கா அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ளுமா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், சிங்கள ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைத் தீர்வு என்பதை விட இனப்பிரச்சினையால் அரசியல் லாபம் தேடவே முற்படுகின்றனர். இந்நிலையில், இவர்கள் இனப்பிரச்சினைத் தீர்வில் எந்தளவு தூரம் மனப்பூர்வமாக ஈடுபட முடியும்?

முடியவில்லை. இது சுதந்திர நாடுகளுக்குள் சிறுபான்மை இனங்கள் மத்தியில் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. பெருமளவிலான பிரதேச தன்னாதிக்கம், பிரதேச பிரிவினை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றிற்கான தமது கோரிக்கைகளை நியாயப்படுத்த இதனை அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

இந்த சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தான் இலங்கைத் தமிழ் மக்கள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். 1983ஆம் ஆண்டிலிருந்து இதற்காகவே 50,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கங்கள் சுயநிர்ணயஉரிமைக்கோட்பாட்டைத் தொடர்ந்தும் நிராகரித்தே வந்துள்ளன.

ஒரு மனித உரிமைவிடயமென்ற வகையில், குழு உரிமைகள் பற்றிய கேள்விகளுக்கும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகளுக்குமிடையே ஒரு சாராம்சம் இருப்பது இப்போது அதிகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுயநிர்ணய உரிமை தொடர்பான கோட்பாடுகள் உரியமுறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மக்களின் சுயநிர்ணய உரிமைகள் என்ற விடயத்தில் இருபகுதிகள் அடங்கியுள்ளன உள்ளூர் அம்சம் வெளி அம்சம் ஆகியனவே அவை. 1960ஆம் ஆண்டு பிரகடனம் கோட்பாட்டின் 'வெளியே' உள்ள விடயங்களை மட்டுமே குறிப்பிடுகின்றது. குடியேற்ற அல்லது சுய ஆட்சியின் கீழ் இல்லாத நாடுகளின் சுதந்திரத்திற்கான உரிமையும் அவை தனியான நாடுகளை அமைத்துக்கொள்வதற்கான உரிமையும் காலனித்துவ மற்றும் தங்கியுள்ள மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் புறம்பான சுயநிர்ணய உரிமைக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். அத்துடன் இதிலிருந்து விடுதலை பெறுவதற்கான உரிமையையும் கொண்டுள்ளார்கள்.

ஆனால் 'உட்புற' சுயநிர்ணய உரிமையின் கோட்பாடு தாராள ஜனநாயகக் கோட்பாட்டிலேயே தங்கியுள்ளது. இதன் மூலம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நோக்கம் கொண்டதாக இது உள்ளது. 'உட்புற' சுயநிர்ணய உரிமை ஒரு பிரதேசத்தில் அந்த மக்கள் அதன் அரசியல், பொருளாதார சமூக கலாசார இலக்குகளை தீர்மானிப்பதற்கான உரிமையாகும்.

சர்வதேச சட்ட நடைமுறைகளில் 'இறைமை'

செயலுக்கும் இட்டுச் செல்வதாகவே உள்ளது.

கெடுபிடி யுத்தத்தின் முடிவு சர்வதேச உறவுகளில் ஒரு புதிய சகாப்தத்தைக் கொண்டு வந்தது. அத்துடன் சமாதானத்திற்கான ஐ. நா. வின் வேலையிலும் புதிய ஆரம்பம் தோன்றியது.

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து சிங்களவர் தலைமையிலான அரசாங்கங்கள் சிங்கள மக்களின் ஆக்கிரமிப்புடன் கூடிய தேசிய வாதத்தை ஊக்குவித்து போஷித்து வந்துள்ளன அத்துடன் தமது அரசியல் அதிகாரத்தை தமிழ் மக்களுக்குக் கேடு ஏற்படுவதற்காகவே பயன்படுத்தினர். தமிழர்களின் அரைப் பகுதியினருக்கு வாக்குரிமையும் பிரஜா உரிமையும் மறுக்கப்பட்டது இதன் மூலம் பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டது.

திட்டமிடப்பட்ட அரசாங்க ஆதரவுடனான குடியேற்றங்களின் மூலம் தமிழ் பேசும் மக்கள் அவர்களது தாயகத்திலேயே சிறுபான்மையினராக்கப்பட்டனர் சிங்களம் மட்டும் உத்தியோக பூர்வ மொழியாக மாற்றப்பட்டதன் மூலம் தமிழ் இரண்டாவது தரத்திற்குக் குறைக்கப்பட்டதுடன், வேலை வாய்ப்பு. கல்வி போன்றவற்றில் தமிழர்களுக்கு சம உரிமை மறுக்கப்பட்டது. குடியரசு அரசியலமைப்பின் கீழ் பௌத்த மதத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டதால் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்கள் இரண்டாவது அந்தஸ்துக்குபின்தள்ளப்பட்டன.

இவ்வாறான நிலைமையில் அரசாங்க கூட்டுறவுடன் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயுமான போராட்டங்கள், உடன்படிக்கைகள் மூலமாகவும் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வுகள் பயனற்றவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது சுதந்திரத்தை வெல்வதற்கான ஓரேயொரு வழியாக ஆயுதப் போராட்டத்தைத் தமிழர்கள் ஆரம்பித்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற அரசாங்கத்தின் சமூக, கலாசார, அரசியல், பொருளாதார ஒடுக்குமுறைக் கொள்கைகளினால் தமிழ்பேசும் மக்களின் கோரிக்கைகள் மூன்று அடிப்படையிலானவையாக உருவாகியுள்ளன இலங்கைத் தமிழர்கள் ஒரு நாடு என்பதை அங்கீகரிக்க வேண்டும் ஒரு தாயகத்திற்கான உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்

டார் நிறுவனங்கள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன. சுயநிர்ணய உரிமையும் காலனித்துவ ஆட்சியிலுள்ள மக்கள் அதனை பிரயோகிப்பது தொடர்பாகவுமே இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. மனித உரிமைகளுக்குமான ஐ நா. ஆணைக்குழுவின் 49ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொண்ட பிரதிநிதிகளிடம் பின்வரும் கோரிக்கைகள் இந்த தீர்மானத்தின் மூலம் விடுக்கப்பட்டது.

(1) இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியின் தமிழர் ''தாயகம்'' உள்ளது என்பதை அங்கீகரிக்க வேண்டும்.

(2) வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையைக் கொண்டுள்ளார்கள் என்பதை அங்கீகரித்தல்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதே இப் பேச்சுவார்த்தைகளில் தடை

பயங்கரவாதத் தடைச்சட்டம் பாதுகாப்பு படைகளுக்கு அதிவிசேட அதிகாரங்களை கொடுத்துள்ளது,

மனித உரிமைகள் அமைப்புக்களின் தகவலின்படி 1992 இல் கிழக்கு மாகாணத்தில் மட்டும் 400க்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர். தென்பகுதியில் காணாமல் போன 40,000 பேர் தொடர்பாகவோ கிழக்கில் காணாமல் போன 5000 பேர் தொடர்பாகவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மனித உரிமைகள் தொடர்பாக கண்காணிப்பதற்கு மனித உரிமைகள் பணிக்குழு ஒன்று 1991 ஆகஸ்டில் அமைக்கப்பட்டது.

ஆனால்இது அதனுடைய, பணியை நிறைவு செய்யக் கூடியதொன்றாக இல்லை என மனிதஉரிமைகள் அமைப்புகள் பலவும் கூறுகின்றன. 1992 ஆகஸ்டில் இதனுடைய

வீன அதிகரிப்பு காரணமாகவே இந்த அதிகரிப்பு ஏற்பட்டது 1992இல் 16 மில்லியன் ரூபா பாதுகாப்புச் செலவீனமாகச் செலவிடப்பட்டது. 1993 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப பாதுகாப்புச் செலவீன ஒதுக்கீடு 19. 8 மில்லியன் ரூபாவாக இருந்தது. ஆனால் மேலதிக 8 மில்லியன் ரூபாவை பாதுகாப்பு அமைச்சு இப்போது கேட்டுள்ளது.

இந்தியாவுடனான உறவுகள் இப்போது மேம்பாடு அடைந்துள்ள நிலையில் கூட ஒரு மத்தியஸ்தபங்கை இந்தியா வழங்காது என்பதை அண்மைய சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

எனவே யுத்தத்துடன் சம்பந்தப்பட்டுள்ள இருதரப்பினரிடையேயும் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் சர்வதேச சமுதாயத்தினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

# சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு சீனி வழங்கப்படுவதில் இழுபறி

யாழ்ப்பாண மாநகர சபையின் கீழியங்கும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு சீனி வழங்கப்படுவது தொடர்பாக செயலக அதிகாரிகளுக்கும் வைத்தியசாலை நிர்வாகிகளுக்குமிடையே இழுபறி நிலை தோன்றியுள்ளது.

சீனி இன்மையால் மருந்துக்கான 'சீனிப்பாணி' யை உற்பத்தி செய்ய முடியாத நிலைமை வைத்தியசாலை நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலையில் நாளாந்தம் சராசரி 250க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சீனி இன்மையால் மருந்து தயாரிக்கப்பட முடியாத நிலையில் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லவேண்டி ஏற்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மேற்படி மருந்து தயாரிப்பதற்கான சீனியின் தேவை தொடர்பாக பிரதேச செயலாளருக்கு இந்த வைத்திய சாலையின் டாக்டர் உத்தியோகபூர்வமாக கடிதம் எழுதியதாகவும், சீனி பெறுவது தொடர்பாக இவருக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும், சில அதிகாரிகளின் அசிரத்தையினால் சீனி இன்னமும் கைக்கு கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. இதே வேளை இது தொடர்பாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது

### நீதிமன்ற தீர்ப்பின் பின்

# அபராதம் செலுத்தியும் யுவதி விடுவிக்கப்படவில்லை

கொழும்பு மேல்'நீதிமன்றத்தினால் ஒத்திவைப்பு சிறையும், அபராதமும் விதிக்கப்பட்டு விடுவிக்கப்படுவதாகத் தீர்ப்பு வழங்கப்பட்ட செல்வி சீனித்தம்பி செல்வராணி அபராதத் தொகையைச் செலுத்தி ஒரு மாதத்திற்கு மேலாகியும் விடுதலை செய்யப்படாதிருப்பது குறித்து கொழும்பு சட்ட உதவி நிலையம் பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி நிலையத்தின் சார்பில் ரி. சோமசுந்தரம் பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர் பி. ஜி ஜயலத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:

செல்வி சீனித்தம்பி செல்வராணி என்ற பெண்மணி கடற்படைத் தளபதி கிளன்சி பெர்னாண்டோ கொலை தொடர்பாகத் தகவல் தரத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

விசாரணையின் முடிவில் நீதியரசர் சந்தேக நபருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதாக 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், 8500 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

குற்றம் சாட்டப்பட்டவர் தீர்ப்பு வழங்கப்பட்ட தினமான ஜனவரி 4ஆம் திகதியே அபராதத் தொகையைச் செலுத்தி விட்டார் எனினும் ஜனவரி 8ஆம் திகதி வரை மேற்படி தீர்ப்பு பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்படாததால் அவர் தொடர்ந்தும் தடுப்புக்காவல் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேல்நீதிமன்ற நீதியரசர் வழங்கிய தீர்ப்பின அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே பிரஸ்தாப தடுப்புக் கைதியை உடனடியாக விடுவிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# பலாலி எறிகணை வீச்சுக்கு சிறுமி உட்பட மூவர் காயம்

(வடமராட்சி)

தொண்டமனாறு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீழ்ந்துவெடித்த எறிகணைகளினால் ஒரு சிறுமி உட்பட மூவர் காயமடைந்தனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து இரவு 7-30மணியளவில் ஏவப்பட்ட இரண்டு எறிகணைகள் தொண்டமனாறு குடியிருப்புப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தமையால் இம் மூவரும் காயமடைய நேர்ந்தது.

ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த தளையசிங்கம் வர்ணசிங்கம் (வயது 28), தளையசிங்கம் துரைசிங்கம் (வயது 32), ஆகியோர் ஓர் எறிகணைக்கும், செல்லத்துரை சந்திரவதனா (வயது13) மற்றோர் எறிகணைக்கும் காயமடைந்தனர்.

இவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஜனாதிபதி மாளிகையில் இரத்தினக்கல் மர்மமறைவு

(கொழும்பு)

கொழும்பு, ஜனாதிபதி மாளிகையில் வைக்கப்பட்டிருந்த விலை மதிப்புள்ள இரத்தினக்கல் ஒன்று காணாமல் போய் விட்டது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்திலிருந்து இந்த இரத்தினக்கல் வைக்கப்பட்டுள்ளது.

இரத்தினக்கல்லை மீளப்பெறும் முயற்சியில் இரகசியப் பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மிகப் பெரும் செல்வந்தர் ஒருவர் இந்த இரத்தினக் கல்லை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் அவருக்கு அன்பளிப்பாக வழங்கினார்.


## உதவியாசிரியர் தேவை

தமிழீழத்திலிருந்து வெளிவரும் முன்னணிச் சஞ்சிகையான உலகஉலாவிற்கு உதவியாசிரியர்பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

1. தமிழ்மொழியறிவு
2. ஆங்கில மொழியறிவு
3. உலகளாவிய பொது அறிவு
4. பத்திரிகைத்துறை அனுபவம்

மேற்குறிப்பிட்ட தகைமைகளை உடையோர் 20-02-1994 இற்கு முன்னர் உங்கள் விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உலக உலா

14, அருச்சுனாவீதி, யாழ்ப்பாணம்,

சம்பளம் நேர்முகம் காணலின்போது பேசித்தீர்க்கப்படும். (சி-8627)



## சகல வீடியோநாடா விநியோகஸ்தர்களுக்கு

1) முதல் பாடல்

2) உள்ளே வெளியே

மேற்படி இரண்டு தமிழ்ப்படங்களும் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் உருவாக்கப்


### அதிபர்கள் கூட்டம்

வேலணை / ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஆண்டு 6க்கு மேற்பட்ட வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு செல்: ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும், அதிபர்கள் தவறாது சமுகமளிக்கும்படி வேலணை/ ஊர்காவற்றுறை கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

#### கற்பிட்டி

எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

''இதுநாட்டின்நன்மைகருதி கொண்டுவரப்பட்டது.கற்பிட்டிக்கடலில் விடுதலைப்புலிகளின்நடமாட்டம் அதிகரித்து வருகிறது. இந் நடமாட்டம் முற்று முழுதாக கட்டுப்படுத்தப்படவேண்டும். இவ்வாறு கட்டுப்படுத்தப்படும்வரை கடல் வலய தடைச்சட்டம் நீக்கப்படமாட்டாது. மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என அவ் அதிகாரி மேலும் கூறினார்.

பருத்தித்துறை கடற்பரப்பில் கடற் கரும் புலிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து வடக்கு - கிழக்கு கடற்பிரதேசம் தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டதும் பின்னர், கொழும்பு, கற்பிட்டி கடற் பிரதேசம் தடைசெய்யப்பட்ட வலயமாக அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

#### கொலை

வல்கள் பொலிசாரிடம் உள்ளன: அத்தகையோரின் வீடுகள் உள்ள பிரதேசங்களில்

## கொக்கட்டிச் சோலையில் தமிழ் மக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை சிறிலங்கா இராணுவ முகாம் இராணுவத்தினர் முனைக்காடு, முதலைக்குடா ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்து நேற்று முன்தினம் பாரிய தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதன்போது கைதான மக்கள் முனைக்காடு மற்றும் முதலைக்குடா பகுதி பாடசாலைகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

அங்கு வைத்து தேர்தலில் வாக்களிக்குமாறு இராணுவத்தினர் மக்களைக் கேட்டுள்ளனர்.

சிறிலங்கா அரச படைகள்

## மனித உரிமை மீறலுக்கு அரசாங்கமே காரணம்

சிறிலங்கா அரச படைகள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு சிறிலங்கா அரசே காரணம் என ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

1993-ம் ஆண்டுக்கான மனித உரிமைகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசபடைகளால் மேற்கொள்ளப்பட்ட பெருமளவு மனித உரிமை மீறல்கள் தொடர்பாகபோதுமான ஆதாரங்கள் உள்ள போதிலும் சிறிலங்கா அரசு அது தொடர்பாக இதுவரை எதுவித விசாரணைகளையும் மேற் கொள்ளவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

#### விடுதலைப்புலிகளின்

வும் தெரிவித்தார்.

தாம் முன்வைத்திருக்கும் சமாதானத் திட்டத்திற்கு பிரபாகரன் ஏன் அமைதி காத்து வருகிறார் எனக் கேட்ட ரணில் விக்கிரமசிங்க பதின்நான்கு மாதங்களாக நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தை தோல்வி கண்டதால் எதிர்கால சமாதான பேச்சுவார்த்தைகளில் பிரபாகரனே நேரடியாக கலந்துகொள்ள வேண்டும் என்பதே அனைத்து அரசியல் கட்சிகளினதும் நிலைப்பாடாகும் எனவும் ரணில் தெரிவித்துள்ளார்.

மார்ச் 1-ம் திகதி நடைபெறவுள்ள உள்ளுராட்சி தேர்தலில் விடுதலைப் புலிகள் கலந்து கொண்டு தமது செல்வாக்கை நிருபித்த பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரலாம் என்றார்.

#### வடக்கு-கிழக்கு

பலர் கைவிட்டுச் செல்வது மாணவர்களுக்குப் பெரும் கேடு விளைவிக்கின்றது என மேலும் அவர் கூறினார்.

#### றுகுணுவில்

முகத்திற்கு வந்துள்ளது.

மேற்படி கப்பலில் செயலகத்திருத்த வேலைக்கென கொழும்பில் ஏற்றப்படவிருந்த மரப்பொருள்கள் இறுதி நேரத்தில் ஏற்றப்படாமல் நிறுத்தப்பட்டதாகவும், தெரியவருகின்றது. (சி)

#### இளைஞர்கள்

### நியமனக் கடிதம்

பொது எழுதுநர் சேவை, களஞ்சியப் பொறுப்பாளர் பதவிக்கு நியமனம் பெற்ற 6 பேருடைய நியமனக் கடிதங்கள் யாழ். செயலகத்தில் உள்ளது. இந் நியமனம் கிடைத்த கீழ் வருவோரை உடனடியாக யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு சமுகமளித்து தமது நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்:-

மேற்படி நியமனம் பெற்றோரது பெயர் விபரம் வருமாறு; எஸ். கே. இளங்கீரன், மாவடி, கரவெட்டி. செல்வி ரீ.வத்சலா, 67, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம், செல்வி பி. பானகி 51 சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், செல்வி எஸ். இரத்தினசிங்கம், 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், செல்வி என். முருகேசு தலைந்தை, கரவெட்டி, ஏ. விமலேந்திரகுமார், 7, மார்க்கற் ஒழுங்கை நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம். (சி)

#### பூநகரியில்

12.55 மணியளவில் மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ராணுவத்தினர் யாழ் நகரக் கரையோரம் நோக்கி எறிகணைத் தாக்குதலை நடத்தினர். (21)

## கட்டாய லீவில் கொத்தலாவல

சிறிலங்காவின் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளில் ஒருவரான லெப். கேணல் கொத்தலாவல அமெரிக்க இராணுவப்பயிற்சிக்கல்லூரியில் நடைபெற்ற திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் மீண்டும் சம்பந்தப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்திருட்டுச் சம்பவத்தில் இவர் சம்பந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி கல்லூரியில் இருந்து இவர் வெளியேற்றப்பட்டுள்ளார். அத்துடன் நாட்டை விட்டு வெளியேறும்படியும் அமெரிக்க அரச அதிகாரிகள் இவருக்கு கட்டளை இட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து கடந்த வாரம் நாடு திரும்பிய திரு. கொத்தலாவல மீது விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்விசாரணைகள் நிறைவடையும் வரை இவருக்கு தற்போதுகட்டாய லீவு வழங்கப்பட்டிருக்கிறது.

### கமக்காரர் அடையாள அட்டை

(கொழும்புத்துறை)

மாகியப்பிட்டி அளவெட்டி செட்டி சனசமூக நிலையத்தினர் அண்மையில் 35 பேருக்கு கமக்காரர் அடையாள அட்டைகளை விநியோகித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

### சேவை வாரம்

யாழ். மாவட்ட சாரணர்களின் சேவை வாரம் 14 - 02 - 94 தொடக்கம் 21-02-94வரை நடைபெறும். இச் சேவை வாரத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கும்படி சாரண மாவட்ட ஆணையாளர் திரு. இ. மகேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மீனாட்சி தம்பு

உரும்பராய் வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மீனாட்சி தம்பு காலமானார். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் கா. தம்பு அவர்களின் மனைவியும், அம்பிகைராஜா (இளைப்பாறிய பிராந்திய தொலைத் தொடர்பு பொறியியலாளர் யாழ்ப்பாணம்), வேலாயுதபிள்ளை (இளைப்பாறிய மின் பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை) ஆகியோரின் தாயாரும், விமலாதேவி, பொன்மயிலாம்பிகை (ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும், யசோதரன், சுபோதினி, மீனாகுமாரி, பிருந்தா, நிரன்ஜலா, ஆனோஜன் ஆகியோரின் பேர்த்தியும்ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று(செவ்வாய்க்கிழமை) காலை11-00 மணிக்கு உரும்பராய் திருவீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருவீதி, உரும்பராய் வடக்கு. (7529) த. அம்பிகைராஜா (மகன்)

### சின்னையா குணரெத்தினம்

(வருமானவரித் திணைக்களம் மட்டக்களப்பு)

14?, அருச்சுனாவீதி, யாழ்ப்பாணம்,

சம்பளம் நேர்முகம் காணலின்போது பேசித்தீர்க்கப்படும். (சி-8627)



# சகல வீடியோநாடா விநியோகஸ்தர்களுக்கு

1) முதல் பாடல்

2) உள்ளே வெளியே

மேற்படி இரண்டு தமிழ்ப்படங்களும் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் உருவாக்கப்பட்ட தணிக்கை சபையினரால் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை தெரியப்படுத்துகிறேன்.

தலைவர்

கலை ஊடக இணையம்

(சி-8632) 117, மானிப்பாய் வீதி, யாழ்.



## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

# ஸ்ரீதர் திரையில்

நிதர்சனம் வழங்கும்

# ஒப்பரேசன் தவளை

தினசரி மாலை:- 4·00, 6·00 மணி

சனி, ஞாயிறு:- காலை 10-00,

பி. ப. 2·30, 4·00, 6-00 மணி

காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது!

(7532)



# கால்நடை மருந்துகள் விற்பனை

எம்மிடம் கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள் விற்பனைக்குண்டு. தேவையானோர் தொடர்பு கொள்ளவும். சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

1. நாகொக்ஸ் NARCOX
2. பொலிக்கன் FOLLIGON
3. றின்ரால் 500 கிராம் RINTAL-VET-10
4. தைகால் THIACAL
5. பியூறோசிலிடின் FUROZELIDEN

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,

திருநெல்வேலி. (சி-8631)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


தடைச்சட்டம் நீக்கப்படமாட்டாது. மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என அவ் அதிகாரி மேலும் கூறினார்.

பருத்தித்துறை கடற்பரப்பில் கடற் கரும் புலிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து வடக்கு-கிழக்கு கடற்பிரதேசம் தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டதும் பின்னர், கொழும்பு, கற்பிட்டி கடற் பிரதேசம் தடைசெய்யப்பட்ட வலயமாக அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## கொலை

வல்கள் பொலிசாரிடம் உள்ளன. அத்தகையோரின் வீடுகள் உள்ள பிரதேசங்களில் அடிக்கடி ரோந்து நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

இயன்றவரை பொதுவான அடிப்படையில் வேட்பாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாலும் சுயேட்சைக் குழுக்களாலும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக திறக்கப்படும் அலுவலகங்களிற்கும் தனியாக பாதுகாப்பு வழங்க பொலிசார் மறுத்துள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் பல வேட்பாளர்களுக்கு தொலைபேசியிலும் கடிதங்கள் மூலமாகவும் புலிகளின் பேரில் பயமுறுத்தல் கடிதங்கள் வருவதும் தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு வேட்பாளர்கள் பொலிசாரை வற்புறுத்திவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## அரைவாசி

வாகும்என்பதனாலேயேபுதிய முறையைக் கொண்டுவர ஆலோசித்துள்ளேன் என்றார்

தற்போது நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல வழிகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை ஒரு குறிப்பிடத்தக்க விடயம் எனவும் எதிர்காலத்தில் நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப இவை பெரிதும் பயன்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பிரபாகரனை

கூடும் எனவும், இது தொடர்பாக நல்ல சமிக்ஞைகள் தெரிவதாகவும் கூறியுள்ள அவர் தன்னால் இயன்றவரை பேச்சுவார்த்தைக்கு உகந்த ஒரு சூழ்நிலையை உருவாக்க பாடுபடப் போவதாகவும் 'லங்காதீப' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரலாம் என்றார்.

## வடக்கு-கிழக்கு

பலர் கைவிட்டுச் செல்வது மாணவர்களுக்குப் பெரும் கேடு விளைவிக்கின்றது என மேலும் அவர் கூறினார்.

## றுகுணுவில்

முகத்திற்கு வந்துள்ளது.

மேற்படி கப்பலில் செயலகத் திருத்த வேலைக்கென கொழும்பில் ஏற்றப்படவிருந்த மரப்பொருள்கள் இறுதி நேரத்தில் ஏற்றப்படாமல் நிறுத்தப்பட்டதாகவும், தெரியவருகின்றது. (ஐ)

51 சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், செல்வி எஸ். இரத்தினசிங்கம், 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், செல்வி என். முருகேசு தலைநிதை, கரவெட்டி, ஏ. விமலேந்திரகுமார், 7, மார்க்கற் ஒழுங்கை நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம். (ஐ)

## பூநகரியில்

12.55 மணியளவில் மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ராணுவத்தினர் யாழ் நகரக் கரையோரம் நோக்கி எறிகணைத் தாக்குதலை நடத்தினர். (21)

## இளைஞர்கள்

சத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அவ் ஏக்க நிலையிலேயே பத்து தினங்கள் வரை இருந்து நேற்று மரணமடைந்தார். இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் இருவர் சுன்னாகம் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். உடுவில் மீனாட்சி அம்மன் கோயிலடியைச்சேர்ந்த செபமாலை (32), காந்தன் (21) ஆகியோரே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

(09), (11)


# எமது உளங்கனிந்த பாராட்டுக்கள்

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு 16-2-1994 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இணுவிலில் தனது செயற்பாட்டை ஆரம்பிக்க இருக்கும், அறிவியல் கழகத்திற்கு எமது ஸ்தாபனத்தின் உளங்கனிந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்

(சி. 8634)



## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 14.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 795

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்.

26-6075, 24-5955, 26-7949, 26-1253, 26-4883
24-9773, 42-1178, 24-6446, 26-649, 22-6163
24-6533, 26-7540, 24-0207, 26-9495, 27-5734
24-6211, 26-5206, 26-4436, 42-2432, 27-9756
26,6199, 26-4885, 26-5281, 26-4882, 41-1092.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்.

24-0878, 41-5178, 40-6979, 27-8515, 28-6020
41-9696, 27-4019, 42-1754, 26,3628, 28-5484
41-9579, 43-6974, 26-4393, 26-8052, 41-1531
28-1311, 43 0488, 26-3633, 41-9876, 24-4323
27-5482, 24-6855, 42-2862.


யியலாளர் இலங்கை மின்சாரசபை) ஆகியோரின் தாயாரும், விமலாதேவி, பொன்மயிலாம்பிகை (ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும், யசோதரன், சுபோதினி, மீனாகுமாரி, பிருந்தா, நிரஞ்ஜலா, ஆனோஜன் ஆகியோரின் பேர்த்தியும்ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று(செவ்வாய்க்கிழமை) காலை11-00 மணிக்கு உரும்பராய் திருவீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருவீதி, த. அம்பிகைராஜா

உரும்பராய் வடக்கு. (7529) (மகன்)

# சின்னையா குணரெத்தினம்

(வருமானவரித் திணைக்களம் மட்டக்களப்பு)

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மட்டக்களப்பை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சி. குணரெத்தினம் மட்டக்களப்பில் 11-02-94 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை (ஆசிரியர்), இரத்தினபூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், கௌரிதேவியின் அன்புக் கணவரும் தெய்வேந்தினி, (பல்கலைக்கழகம் மட்டக்களப்பு), கமலினி (மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, நடராசா, மகாலிங்கம் (புடவை கைத்தொழில் திணைக்களம்), சரஸ்வதி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பேபி, ஸ்ரீகுகன் (நீர்ப்பாசன திணைக்களம் மட்டக்களப்பு), ஸ்ரீ ஈஸ்வரன் (பிரான்ஸ்), ஸ்ரீபகவான் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (13-2-94) ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் மட்டக்களப்பு மயானத்தில் நடைபெற்றன என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்

123|2, கோவில் வீதி, செ. இரத்தினபூபதி

யாழ்ப்பாணம். (7530) (மாமி)

# வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

## [சுப்பண்ணை]

மயிலிட்டியை பிறப்பிடமாகவும், கொல்லங்கலட்டி பரந்தகலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை-விநாயகமூர்த்தி (சுப்பண்ணை) சிவபதமடைந்தார். அன்னார் திரு. சின்னத்துரையின் (தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான ஓதுவார்) அன்பு சகோதரராவார். அன்னாரின்ஈமக்கிரியைகள் (15-02-94) இன்று 10 மணியளவில் உடுவில் மேற்கிலுள்ள இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்

இலந்தையடி ஒழுங்கை, வே. சின்னத்துரை

உடுவில் மேற்கு.

சுன்னாகம். (7531)